www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு : 8

தேர்வு எண் | | | | | | |

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 50

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5X1=5

1. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர்
   (அ) பாரதிதாசன் (ஆ) தந்தை பெரியார் (இ) திரு.வி.க ஈ) பெருஞ்சித்திரனார்
2. ஆய்த எழுத்து பிறக்கும் இடம்
   (அ) மார்பு (ஆ) தலை (இ) மூக்கு ஈ) கழுத்து
3. தமிழ் எழுத்துக்கள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ------- காரணமாக அமைந்தது.
   (அ) ஓவியக்கலை (ஆ) இசைக்கலை (இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை
4. வல்லின எழுத்துக்கள் பிறக்கும் இடம் ------.
   (அ) தலை (ஆ) மார்பு (இ) மூக்கு ஈ) கழுத்து
5. பயனில்லாத களர் நிலத்திற்கு ஒப்பானவர்கள் ----------.
   (அ) வலிமையற்றவர் (ஆ) கல்லாதவர் (இ) ஒழுக்கமற்றவர் (ஈ) அன்பில்லாதவர்

II கோடிட்ட இடங்களை நிரப்புக. 2X1=2

6. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ----------.
7. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ---------.

பகுதி - II

பிரிவு–I

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. 5X2=10

8. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
9. உலகம் எவற்றால் ஆனது?
10. சான்றோர்க்கு அழகாவது எது?
11. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?
12. வினைமுற்று எத்தனை வகைப்படும்? அவை யாவை?
13. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
14. சான்றோர்க்கு அழகாவது எது?

பிரிவு – II

IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி. 3X3=9

15. எழுத்துச் சீர்த்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.
16. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?
17. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.
18. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?
19. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?
20. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பகுதி - III

பிரிவு–I

V. அடிமாறாமல் எழுதுக. 4+2=6

21. "வாழ்க நிரந்தரம்" எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

22. "தக்கார்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு – II

VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2X4=8

23. சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடர்களாக்குக.

அ) உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ள வரையிலும்

ஆ) வட்ட எழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து

இ) ஏகலை கலையை அம்பு விடும் தமிழ் என்றது

ஈ) கழுத்து பிறக்கும் இடம் உயிர் எழுத்து ஆகும்

(அல்லது)

பொருத்தமான பன்மை விகுதியை இணைத்து எழுதுக.

(கள்/ க்கள்/ ங்கள் / ற்கள்)

அ) பக்கம் = ---- ஆ) சொல் = ---- இ) கிழமை = ---- ஈ) பா = ----

24. கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிக.

அ) முக்காலமும் உணர்ந்தவர்கள் நம் முன்னோர் ----

ஆ) பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே! ----

இ) கடமையைச் செய் ------.

ஈ) நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்? -----.

(அல்லது)

பள்ளியில் உனது பொறுப்புகள் எவையேனும் நான்கினை எழுதுக.

பிரிவு – III

VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5x2=10

25. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) பால் ----- (குடி / பருகு) ஆ) சோறு ---- (தின் / உண்)

26. பிரித்து எழுதுக.

அ) ஐம்பால் ஆ) நன்செய்

27. அடிக்கோடிட்ட எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.

அ) உலக இயற்கை நாள் அக்டோபர் <u>3</u>

ஆ) உலக ஈரநில நாள் பிப்ரவரி <u>2</u>

28. அடைப்புக்கள் உள்ளவாறு தொடர்களை மாற்றுக.

அ) காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. (வினாத்தொடராக மாற்றுக.)

ஆ) காடு மிகவும் அழகானது. (உணர்ச்சித் தொடராக மாற்றுக.)

29. அகரவரிசைப்படுத்துக.

எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஆரம்நீ.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com